DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 415/2024
Miscellaneous :
Sessions : PW 6
Deposition of Witness for

**A2 died A1 Judicial custody A3 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | மோகன் |
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | சித்தாமூர் |
| Taluk | செய்யூர் |
| Age | 52 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **05.03.2026**

**முதல் விசாரணை:**

1.)நான் தற்போது மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 10.02.2024 ம் தேதி 14.00 மணிக்கு வேலு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 42/2024 இதச பிரிவுகள் 457 380 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அவர் சம்பவ இடம் சென்று 10.02.2024 ம் தேதி 15.00 மணிக்கு சாட்சிகள் சுரேஷ் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அசாஆ 9 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

**2.** பின்னர் வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் செண்டிவாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே 17.02.2024 ம் தேதி 16.00 மணிக்கு சதீஷ்குமார் மற்றும் பிரகாஷ் ஆகியோர்களை கைது செய்தேன். பிரகாஷ் என்பவர் தாமாக முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் திருமுருகன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 17.02.2024 ம் தேதி 5.30 மணியளவில் நேமம் காட்டு ரோட்டில் உள்ள புதரில் இருந்து பிரகாஷ் என்பவர் எடுத்து ஆஜர் செய்த தூங்கா பித்தளை விலக்கு எண்ணிகை 3 மற்றும் பித்தளை மணிகள் எண்ணிக்கை இரண்டு ஆகியவற்றை மேற்படி திருமுருகன் மற்றும் ஆறுமுகம் முன்னியலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (அந்த கைப்பற்றுதல் மகஜர் அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. அந்த மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(அந்த கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான படிவம் 91 அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

R. Mohan SSI

பின்னர் மற்றொரு எதிரி பிரபா என்பவரை தேடிவந்த அவரை PT warrant மூலம் ஆஜர் படுத்தி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எதிரிகள் பிரகாஷ் மற்றும் சதிஷ்குமார் ஆகியோர்களை கைது செய்த பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் விசாரணையை முடித்து இதச பிரிவுகள் **457 380** ன் கீழ் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையானவர்கள் கிளியாநகர் கிராமத்தை சார்ந்தவர்கள் என்றால் 1 முதல் 5 வரையானவர்கள் மட்டும் கிளியாநகரை சேர்ந்தவர்கள். மாதிரி வரைடத்தில் உள்ள சாலை வந்தவாசியில் இருந்து எண்டத்தூர் நோக்கி செல்லும் சாலை என்றால் சரிதான். சம்பவயிடமான கிளியாநகரில் இருந்து மேல்மருவத்தூர் காவல் நிலையத்திற்கு வருதவற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 45 நிமிடங்கள் ஆகும். புகார்தாரர் எப்போது புகார் கொடுத்தார் என்றால் 10.02.2024 ம் தேதி 14.00 மணி ஆகும். புகார் கொடுக்க காலதாமதம் ஆனதை குறித்து புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் கிளியாநகர் கிராமத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் தயார் செய்த இடம் திருமுக்காடு கிராமம் என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு எதிரிகளுக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் கைப்பற்றுதல் மகசர் திருமுக்காடு கிராமத்தில் தயார் செய்திருந்தால் அந்த ஊரை சேர்ந்த நபரை தான் நான் கைப்பற்றுதல் சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாணை இல்லை.

R. Murugesan SSI

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

5/3/26

Judicial Magistrate No.II
Madurantakam